IN /THE COURT OF THE SUBORDINATE JUDGES COURT HOSUR

SC 48/2020 11.04.2022

ம.சா.1 4 ஆயிஷா சுல்தானா

ம.சா 1 மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

சாட்சி அரசு தரப்பில் மனுவின் பேரில் அழைத்து மறுவிசாரணை செய்யப்பட்டார். சண்முகம் த/பெ. ஸ்ரீனிவாசன் என்பவர் 5.10.19 அன்று ஒசூர் அரசு மருத்துவவனைக்கு வந்த போது நான் பரிசோதித்து வழங்கிய விபத்து பதிவேட்டு நகல் -அந்த விபத்து பதிவேட்டு நகல் -உண்மை நகல் -அரசு தரப்பு சான்றாவணம் 6.அதே தேதியில் சந்ரு மெய்யப்பன் த/பெ.சண்முகம் என்பவரை பரிசொததித்து வழங்கிய விபத்து பதிவேட்டு நகல் -அரசு தரப்பு சான்றாவணம் 7

குறக்கு விசாரணை

நான் விபத்து பதிவேட்டு நகலில் குறிப்பிட்டுள்ள காயங்கள் தான் நான் சிகிச்சை வழங்கிய நபர்களின் உடலில் நான் முதல் முதலாக பார்த்த காயங்கள். சண்முகத்திற்கு வெளி நோயாளியாக சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. நோயாளி வெளி நோயாளியாக சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளதால் அவருக்கு ஏற்பட்டது சாதாராண காயம் தான் என்று சொன்னால் பார்த்தவுடன் இருந்த காயத்தை விபத்து பதிவேட்டு நகலில் குறிப்பிட்டுள்ளேன். சிடி ஸ்கேன் எடுத்துப்பார்த்தபின்பு தான் அவருக்கு எலும்பு முறிவு இருந்தது தெரியவந்தது. சிடி ஸ்கேன் அரசு மருத்துவமனையில் எடுக்கப்படவில்லை. ஏன்னிடம் சிடி ஸ்கேனின் நகல் தற்பொழுது இல்லை. சிடி ஸ்கேனை பார்த்தால் என்னால் அந்த காயம் சாதாரண காயமா கொடும் காயமா என்று கருத்து சொல்ல முடியும். சுந்ரு மெய்யப்பனின் விரல் நான் பார்த்தபொழுது துண்டாகி தொங்கி கொண்டிருந்ததா என்று எனக்கு தற்பொழுது அது ஞாபகம் இல்லை.அவ்வாறு நான் விபத்து பதிவேட்டு நகலில் குறிப்பிடவில்லை. எலும்பு முறிவுக்கு சிகிச்சை அளிக்கும் வசதி அரசு மருத்துவமனயில் உள்ளது.ஆனால் எலும்பு முறிவு மருத்துவர் இல்லை.